**BEFORE THE II ADDITIONAL LABOUR COURT AT CHENNAI**

**DEPOSITION OF WITNESS**

---

**Case No. : OP.226/2024** **Date : 16.09.2025**

Deposition of : WW1

Name : Mr.Hari Venkatakrishnan

Age : 57years

Father's Name : Mr. N.Narayana Prasad

Address :

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).**

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் உள்விசாரணையின் போது MW1 ஆக விசாரிக்கப்பட்ட ருத்ர நாராயணன் வாக்குமூலம் தான் அது. அதன் நகல் எனக்கு வழங்கப்பட்டு அன்றே நான் கையெழுத்துமிட்டிருக்கிறேன். **(Statement of MW1 Ex.M3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் உள்விசாரணையின் போது MW2 ஆக விசாரிக்கப்பட்ட ரேவதி வாக்குமூலம் தான் அது. அதன் நகல் எனக்கு வழங்கப்பட்டு அன்றே நான் கையெழுத்துமிட்டிருக்கிறேன். **(Statement of MW2 Ex.M4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. உள்விசாரணையின் போது நான் கொடுத்த வாக்குமூலம் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆகும். **(Statement of the petitioner Ex.M5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** Ex.W4 க்கு நான் எந்த பதிலும்

LINGESWARAN DHARMALINGAM Digitally signed by LINGESWARAN DHARMALINGAM Date: 2025.09.16 18:39:40 +0530

கொடுக்கவில்லை. அதற்கு பதிலளிக்க வேண்டுமா என்று எனக்கு தெரியவில்லை. Ex.W4 ல் திரு.K.R.ஹரிஹரன் என்ற வழக்கறிஞர்தான் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு நான் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை.

3. Ex.W6 விசாரணை அறிக்கைக்கு நான் பதிலளித்துள்ளேன். அந்த ஆவணம்தான் என்னிடம் காட்டப்படும் Ex.W8 ஆகும். என்னிடம் காட்டப்படும் எழுத்துமூலமான வாதங்கள் நான் விசாரணை அதிகாரியிடம் வழங்கியவைதான். **(01.11.2023, 08.11.2023 தேதியிட்ட எழுத்துமூலமான வாதங்கள் Ex.M6 மற்றும் Ex.M7 ஆக குறியீடு செய்யப்படுகிறன்றன.)** என்னிடம் காட்டப்படும் Executive service agreement எனக்கும் நிர்வாகத்திற்குமானதுதான். **(Executive service agreement Ex.M8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. உள்விசாரணை 15 வாய்தாக்கள் நடைபெற்றன என்றால் சரிதான். Ex.M1 ல் முதல் விசாரணை நாளான 25.08.2023 அன்று charge sheet ல் உள்ள சங்கதிகள் எனக்கு தமிழில் விளக்கி சொல்லப்பட்டு விசாரணை நடந்தது என்றால் சரியல்ல. அதில் தேதி திருத்தப்பட்டு அந்த நகல் பின்னால்தான் வழங்கப்பட்டது. உள்விசாரணையின் போது என்னென்ன நடைமுறைகள் எவ்வாறு பின்பற்றப்படும் என்பதைப்பற்றியெல்லாம் எனக்கு விளக்கமாக எடுத்துச்சொல்லப்பட்டு அவற்றையெல்லாம் நான் நன்கு புரிந்துகொண்டபிறகுதான் உள்விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல.

LINGESWARAN DHARMALINGAM

Digitally signed by LINGESWARAN DHARMALINGAM
Date: 2025.09.16 18:39:50 +0530

5. விசாரணையின்போது நான் எனக்கு உதவியாக என்னுடைய விருப்பப்படி என்னுடைய சக ஊழியர் ஒருவரை நியமித்துக் கொள்ளலாம் என்று எனக்கு சொல்லப்பட்டது. ஆனால் எனக்கு அவ்வாறு ஒருவரை உதவிக்கு வைத்துக்கொள்ள நிர்வாகம் அனுமதிக்கவில்லை. செல்போனில் பேசக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். எந்த ஊழியரும் என்னிடம் இதுநாள் வரை பேசவில்லை. நான் பலருக்கு போன் செய்தேன் யாரும் எடுக்கவில்லை. எனக்கு உள்விசாரணையின்போது அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டு காலஅவகாசம் வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பும் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

6. என்னிடம் காட்டப்படும் கடிதம் நான் விசாரணை அதிகாரியிடம் வழங்கியதுதான். **(19.09.2023 தேதியிட்ட கடிதம் Ex.M9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** Ex.M9 ல் கேட்கப்பட்ட ஆவணங்கள் எனக்கு வழங்கப்பட்டுவிட்டன. ஒருசில ஆவணங்கள் வழங்கப்படவில்லை. ருத்ர நாராயணனின் appointment letter, Travel expenses statement நான்கு கேட்டேன். அதில் மூன்றுதான் தந்தார்கள். Clarity on deduction mail copy என்று நான் கேட்டிருக்கும் ஆவணத்தை தரவில்லை. ருத்ர நாராயணனின் appointment letter என்மீதான விசாரணைக்கு தொடர்புடையது அல்ல என்பதால் அது வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

7. 25.11.2023 அன்று நான் கேட்ட travel expenses statement நான்கு ஆவணங்களையும் எனக்கு வழங்கி விசாரணையை மீண்டும் re-open செய்து அந்த ஆவணங்கள் Ex.M15 to Ex.M18 ஆக

LINGESWARAN DHARMALINGAM
Digitally signed by LINGESWARAN DHARMALINGAM
Date: 2025.09.16 18:39:57 +0530

உள்விசாரணையின்போது குறியீடு செய்யப்பட்டன என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டபிறகு அது சம்பந்தமான குறுக்கு விசாரணை செய்ய அறிவுறுத்தப்பட்டு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது என்றால் சரிதான். Ex.M9 ல் நான் கேட்ட ருத்ர நாராயணன் கொடுத்த புகார் கடிதம் எனக்கு வழங்கப்பட்டு அது உள்விசாரணையின்போது Ex.M8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. 25.09.2023 அன்று உள்விசாரணையில் MO.1 ஆக குறியீடு செய்யப்பட்ட pendrive ல் இருந்த audio play செய்யப்பட்டு அதனை நான் கேட்டபிறகுதான் அது MO.1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. Ex.M1 series ஆவணத்தில் 13 வது பக்கத்தில் 'MO.1 (pendrive) was heard by me & one pendrive is with me' என்று நான் எழுதி கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரிதான், அவ்வாறு எழுதி கையொப்பமிடச்சொன்னார்கள், நான் அவ்வாறு செய்தேன்.

**நீதிமன்ற கேள்வி:** அந்த pendrive எங்குள்ளது?

**பதில்:** என் வீட்டில் உள்ளது.

9. Ex.M4 ல் கண்ட statement என்னிடம் 13.10.2023 அன்று வழங்கப்பட்டு அது சம்பந்தமான குறுக்கு விசாரணை செய்ய எனக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். 16.10.2023 அன்று ரேவதியை குறுக்கு விசாரணை செய்த பிறகு நான் என்னுடைய சக ஊழியரை சாட்சியாக அழைத்து வரலாம் என்றும் நானே ஒரு சாட்சியாகவும்

LINGESWARAN DHARMALINGAM
Digitally signed by LINGESWARAN DHARMALINGAM
Date: 2025.09.16 18:40:05 +0530

இருக்கலாம் என்றும் நடைமுறைகள் எனக்கு சொல்லப்பட்டு அதனை நான் புரிந்துகொண்டதாக Ex.M1 வரிசையில் பக்கம் 19 ல் எழுதப்பட்டு அதில் நான் கையெழுத்திட்டிருக்கிறேன் என்றால் சரிதான்.

**(pendrive தற்சமயம் கைவசம் இல்லாததால் குறுக்கு விசாரணையை ஒத்திவைக்க கோரப்பட்டது, அதன்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

LINGESWARAN
DHARMALINGAM

Digitally signed by
LINGESWARAN
DHARMALINGAM
Date: 2025.09.16
18:40:10 +0530